மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது இருப்பவர்களெல்லாம் புதிய உறுப்பினர்கள். நிறைய உறுப்பினர்கள் தாமதமாகத்தான் கேள்விகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பதிலுக்காக அனுப்பியிருக்கிறோம். பதில் வந்தவுடன், கேள்விகளை நாம் எடுத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே, 25 நாட்கள்கூட கேள்வி நேரம் இல்லாமல் இந்த அவை நடந்திருக்கிறது. ஆகவே, அதுமாதிரியில்லாமல் கேள்விகளுக்குண்டான பதில் வந்தவுடனேயே, விரைவில், நான் கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) கேள்விகளுக்கு பதில் வரவில்லை.*

(ஆ) கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் பிரச்சினை குறித்து கொடுத்த கவன ஈர்ப்பை நான் ஏற்கெனவே நினைவுபடுத்தியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பதிலளிக்கத் தயாராக இருப்பதாக தாங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) பதில் சொல்கிறீர்களா? சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய* GAIL–Gas Authority of India Limited *நிறுவனத்தால், கேரள மாநிலத்தில் இருக்கக்கூடிய கொச்சின் திரவ எரிவாயு முனையத்திலிருந்து பெங்களூரு வரை எரிவாயுவைக் குழாய்மூலம் கொண்டு செல்லக்கூடிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளினுடைய நலனுக்கு எதிராக அந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. குறிப்பாக, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி இந்த ஏழு மாவட்டங்கள் மட்டுமல்லாமல், திருவாரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மன்னார்குடியிலும் குறிப்பிட்ட சில பகுதிகள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு, 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 20 மீட்டர் அகலத்திலே குழாய்கள் பதிக்கக்கூடிய இந்தத் திட்டத்தால், விவசாயிகளுடைய நலன்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு*

இதுகுறித்து ஏற்கெனவே நீதிமன்றத்திலே வழக்கு போட்டிருந்தாலும், மத்திய அரசுக்கு இதுகுறித்து கடிதங்கள் எழுதியிருந்தாலும், சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய மத்திய அமைச்சர் அவர்கள், அதைக் கொண்டு வந்தே தீருவோம் என்ற நிலையிலே, அண்மையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திலும் இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய நலன் காக்கின்ற அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விஷயம், ஏழு மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட விஷயம். கொச்சியிலிருந்து கொடநாடு, பெங்களூரு, மங்களூர் போன்ற இடங்களுக்கெல்லாம் எரிவாயுவைக் கொண்டு செல்லும் குழாய் அமைப்புப் பணிகள், இந்தப் பணிகள். இது தொடர்பாக ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2013 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 6, 7, 8 ஆகிய நாட்களில் பொது கருத்துக் கேட்புக் கூட்டத்தினை நடத்தி, அதில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், தற்போதுள்ள நிலையில் அந்த வேலையை நிறுத்திவைப்பதற்கும், இத்திட்டத்திற்கான குழாய்களை நெடுஞ்சாலைகளின் ஓரமாகப் பதிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடர்ச்சியாகத்தான், தமிழக அரசின் முடிவுகளை இரத்து செய்யவும், கெயில் நிறுவனத்தின் திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு வழிவகைகளை செய்திட உதவிடக் கோரியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் கெயில் நிறுவனம், நீதிப் பேராணை மனு 12897/2013-ல் தாக்கல் செய்திருந்தது. சென்னை உயர் நீதிமன்றம் தனது 25-11-2013 ஆம் நாளிட்ட ஆணையில், கெயில் நிறுவனம் தாக்கல் செய்திருந்த நீதிப் பேராணை மனுவினை அனுமதித்து, நில உரிமையாளர்களை சம்மதிக்க வைத்து, திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகை செய்யுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

முற்பகல் 10–05

சென்னை உயர் நீதிமன்றத்தின் 25–11–2013 ஆம் நாளிட்ட ஆணைக்கெதிராக, தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு எண் 37224, 37226/2013 (SLP) *29-11-2013 அன்று வழக்கு தொடுக்கப்பட்டது. தனது 2–2–2016 நாளிட்ட ஆணையில்,* Civil Appeal *மூலமாக உச்ச நீதிமன்றம் அந்த வழக்கினைத் தள்ளுபடி செய்து* GAIL *நிறுவனத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து, தமிழக அரசின் சீராய்வு மனுக்களும்* (Review Petitions) *உச்ச நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன. இது தொடர்பாக சமீபத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தில்* GAIL *நிறுவனத்திற்கு எதிராக, நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த 109 விவசாயிகள் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி, தொடர்ந்து* GAIL *நிறுவனத்தினுடைய குழாய்கள் பதிக்கப்படும்போது சாலையோரமாகத்தான் பதிக்க வேண்டும் என்பதிலும், விவசாயப் பெருங்குடி மக்களுடைய நலனில் எந்தவித பாதிப்பும் ஏற்படாமல்தான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதிலும் (மேசையைத் தட்டும் ஒலி) உறுதியாக இருந்துவருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 14–6–2016 அன்று சமர்ப்பித்த கோரிக்கைகளில் ஒன்றாக,* GAIL *திட்டத்திற்கான குழாய்களை, விவசாயிகளுக்கு எந்தவித சிறு அளவும் பாதிப்பு இல்லாத வகையில் பதிக்க வேண்டுமென்ற கருத்தையும் வலியுறுத்திச் சொல்லியுள்ளார்கள் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, விவசாயிகளினுடைய நலன் காக்கின்ற அரசு; விவசாயிகளுக்கு சிறு பாதிப்புகள்கூட வரக்கூடாது; விவசாயிகள் வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தோடு செயல்படுகிற அரசு. எனவே,* GAIL *நிறுவனம் செயல்படுத்தும் இந்தத் திட்டத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறார்கள் என்பதை நான் பெருமையோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*